<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கீரனூர்</u>
முன்னிலை: திருமதி.க.சர்மிஷ்டா, பி.ஏ.எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, கீரனூர்
2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08ம் நாள், புதன்கிழமை
<u>அசல் வழக்கு எண்.121/2018</u>
<u>(CNR No.TNPD0B0001972018)</u>

1.சிவசாம்பாள் (இறந்துவிட்டார்)
2. ராஜேந்திரன் ...வாதிகள்

(இ.ம.எண்.06/2025, நாள்:24.06.2025–ன் உத்தரவின் படி 2–ம் வாதி தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்)

//எதிர்//

1. ஜோதி
2. ராணி
3. கருப்பையா
4. மாரிக்கண்ணு
5. துளசி
6. பரமசிவம்
7. பொன்னுசாமி
8. சுப்பிரமணி
9. கலியபெருமாள்
10. ரமேஷ்
11. தனி வட்டாட்சியர் (நிலமெடுப்பு)
காவேரி–வைகை–குண்டாறு இணைப்பு
கால்வாய் திட்டம், அலகு–1, கீரனூர்.
12. மாவட்ட வருவாய் அலுவலர், புதுக்கோட்டை. ...பிரதிவாதிகள்

(இ.ம.எண்.04/2023, நாள்:25.04.2023–ன் உத்தரவின் படி 11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்)

இவ்வழக்கு 08.09.2025–ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.S.L.சின்னராஜா அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 10 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், 11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

தீர்ப்புரை

1. வழக்குச் சொத்துக்களில் வாதிக்கு சட்டப்படி பாகபாத்திய உரிமையுடைய 1/6 பாகத்தை நய இளப்பம் சரி செய்து பிரிவினை செய்து தனித்த சுவாதீனம் ஒப்படைக்க பிரதிவாதிகளுக்கு எதிராக முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கக் கோரியும், தாவா 7வது அயிட்ட சொத்தைப் பொறுத்து 3ம் பிரதிவாதியின் மகன்களான 7 மற்றும் 8–ம் பிரதிவாதிகள் 10ம் பிரதிவாதிக்கு கடந்த 10.10.2014 தேதியன்று குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில், ஆவண எண்.3999/2014–ன் படி ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவா 1 முதல் 3, 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 5ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு கடந்த 13.07.2015ம் தேதியன்று குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில், ஆவண எண்.2434/2015–ன் படி ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகள் வேறு யாருக்கும் கிரையம் முதலிய பாராதீனம் செய்யக்

கூடாதென நிரந்தர தடையாணை பரிகாரம் வழங்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:-</u>

2.1 தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனாரான அம்மாசி கோனார் என்பவருக்கும், வாதியின் தாயார் சுப்பம்மாள் என்பவருக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி அம்மாசி கோனார் மற்றும் சுப்பம்மாள் தனது மகன்கள் மற்றும் மகள்களான வாதியையும், சங்கலியம்மாள் என்பவரையும், 3 முதல் 6 பிரதிவாதிகளையும் தனது வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டனர். தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களுக்கான ரீ செட்டில்மெண்ட் 'அ' பதிவேடு வாதியின் தகப்பனாரான அம்மாசி கோனார் பெயரிலும், தாவா 7வது அயிட்ட சொத்திற்கான UDR 'அ' பதிவேடு வாதியின் பெற்றோர்களான அம்மாசி கோனார் மற்றும் சுப்பம்மாள் பெயரிலும் உள்ளது. வாதியின் தாயார் மற்றும் தகப்பனாரின் இறப்பிற்கு பின்னர் வாதியும், வாதியின் சகோதரியான சங்கிலியம்மாள் என்பவரும், 3 முதல் 6 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். இந்நிலையில், வாதியின் சகோதரியான சங்கிலியம்மாள் என்பவர் ஒரு பவுனம்பாள் மற்றும் 1ம் பிரதிவாதியான ஜோதி என்பவரையும் தனது வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேற்படி பவுனம்பாள் என்பவரும் 2ம் பிரதிவாதியை மட்டும் தனது வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். எனவே, தாவா சொத்துக்களை வாதியும், வழக்கு 1 முதல் 6 பிரதிவாதிகளும் எவ்வித பிரிவினையும் இன்றி கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கான பட்டா கூட்டாக 5 மற்றும் 6 பிரதிவாதிகளின்

பெயரில் ஏற்பட்டுள்ளது. தாவா 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களுக்கான பட்டா 5ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ளது. தாவா 7வது அயிட்ட சொத்திற்கான பட்டா 7ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ளது. மேற்படி பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களுள் வாதியின் தாயாரின் சுய சம்பாத்தியத்தில் பெறப்பட்ட சொத்துக்களான சர்வே எண்.488/10ல் 0.07.5 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலமும், சர்வே எண்.481/2–ல் உள்ள நிலமும், வாதியின் தாயாரால் வாதிக்கு இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. சர்வே எண்ணான.481/2 தற்பொழுது உட்பிரிவு செய்யப்பட்ட 481/2A மற்றும் 481/2B1 என உள்ளது.

2.2 வாதிக்கும் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் வாதியும், 1 முதல் 6 பிரதிவாதிகளும் வழக்கு சொத்துக்களில் கூட்டாக அனுபவம் செய்ய இயலாது என்பதால், கடந்த 12.11.2017ம் தேதியன்று வாதி 1 முதல் 6 பிரதிவாதிகளிடம் வாதிக்கு வழக்கு சொத்துக்களில் உள்ள பாகத்தை நய இளப்பம் சரிசெய்து பிரிவினை செய்து கொடுக்குமாறு கேட்டதற்கு 1 முதல் 6 பிரதிவாதிகள் வழக்கு சொத்துக்களில் வாதிக்கு உள்ள 6ல் 1 பாகத்தை பிரிவினை செய்து கொடுப்பதாகவும், வழக்கு சொத்துக்களில் சில சொத்துக்களை வாதிக்கு தெரியாமல் விற்பனை செய்துவிட்டதாகவும் மீதம் உள்ள சொத்துக்களை பிரிவினை செய்து கொடுப்பதாக தெரிவித்தார்கள். அப்பொழுது தான் கூட்டுக்குடும்ப சொத்துக்களில் ஒரு சில சொத்துக்களை விற்பனை செய்த விவரம் வாதிக்கு தெரியவந்தது. வாதி அதன் பின்னிட்டு தாவா சொத்துக்களுக்குரிய சிட்டாக்களையும், வில்லங்கசான்றிதழையும் எடுத்து பார்த்தப்போதுதான், கடந்த 10.10.2014ம் தேதியன்று தாவா 7வது அயிட்ட

சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.44.0 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலத்தைப் பொறுத்து மட்டும், 3ம் பிரதிவாதியின் மகன்களான 7, 8 பிரதிவாதிகள் குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.3999/2014 கொண்ட ஆவணத்தின்படி பெயரளவிற்கு மட்டும் 10ம் பிரதிவாதிக்கு ஆதரவாக கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்திருப்பதும், கடந்த 13.07.2015ம் தேதியன்று தாவா முதல் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.00.66 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.00.66 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா மூன்றாவது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 00.10.5 பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா ஐந்து மற்றும் ஆறு அயிட்ட சொத்துக்கள் முழுவதையும் 5ம் பிரதிவாதி குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.2434/2015 கொண்ட கிரைய ஆவணத்தின் படி 9ம் பிரதிவாதிக்கு ஆவணம் ஏற்படுத்தி கொடுத்திருப்பதும் வாதிக்கு தெரியவந்தது. வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 6 ல் 1 பாகம் உரிமை உடையதாகும். மேலும், மேற்படி கிரைய ஆவணங்கள் வாதியின் பாக உரிமையை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது. வாதி பிரதிவாதிகளுக்கு கடந்த 04.12.2017ம் தேதியன்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பை 1, 6 மற்றும் 10ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்ப முன்வராமலும், வாதிக்கு உரிய பாக உரிமையை பிரிவினை செய்து கொடுக்க முன்வராமலும் இருந்து வருகின்றனர். மற்ற பிரதிவாதிகளான 5ம் பிரதிவாதி ஊரில் இருந்து கொண்டே ஊரில் இல்லாததை போல் அஞ்சல்துறையினர்

மூலம் சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பை திருப்பி அனுப்பிவிட்டார். மற்ற பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை வாங்க மறுத்ததால் மேற்படி அறிவிப்புகள் திருப்பப்பட்டுள்ளது. எனவே, வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. 1, 6, 4 மற்றும் 9ம் பிரதிவாதிகள் அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட பின்னரும் நீதிமன்றத்தில் ஆஜராகாதகாரணத்தினால் கடந்த 03.01.2019–ம் தேதியன்று தோன்றாத் தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளனர். 5ம் பிரதிவாதி அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட பின்னரும் நீதிமன்றத்தில் ஆஜராகாதகாரணத்தினால் கடந்த 12.03.2019–ம் தேதியன்று தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார். 2ம் பிரதிவாதி அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட பின்னரும் நீதிமன்றத்தில் ஆஜராகாதகாரணத்தினால் கடந்த 29.04.2019–ம் தேதியன்று தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார். 3, 7, 8 மற்றும் 10 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி, பின்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 31.07.2019ம் தேதியன்று தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

4. 11–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் (அதனை 12–ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்):–

கடந்த 17.10.2021–ம் தேதி தமிழக அரசால் அரசிதழில் வெளியிடப்பட்ட காவேரி வைகை குண்டாறு இணைப்பு திட்டத்தில் எவ்வளவு விஸ்தீரணம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்வதற்காக 11, 12 பிரதிவாதிகளை வழக்கில் சேர்த்துள்ளதாக வாதி வ.வி.எண்.2/2022ல் குறிப்பிட்டுள்ளார். புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுக்கா, புலியூர்

கிராம சர்வே எண்.481/3 ரயத்து புன்செய் நிலத்தில் 0.05.5 ஏர்ஸ் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நிலத்திற்கான பட்டா எண்.1508 ஆகும். மேற்படி நிலத்திற்கான பட்டாதாரர்கள் அம்மாசி கோனார் மகன்களான கருப்பு கோனார், துளசி மற்றும் பரமசிவம் ஆவார்கள். மேற்படி கிராம சர்வே எண்.479/4 ரயத்து புன்செய் நிலத்தில் 0.06.5 ஏர்ஸ் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நிலத்திற்கான பட்டா எண்.2732 ஆகும். மேற்படி நிலத்திற்கான பட்டாதாரர் மணிக்கோனார் மகன் கலியபெருமாள் ஆவார்கள். மேற்படி கிராம சர்வே எண்.479/6 ரயத்து புன்செய் நிலத்தில் 0.02.30 ஏர்ஸ் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நிலத்திற்கான பட்டா எண்.2732 ஆகும். மேற்படி நிலத்திற்கான பட்டாதாரர் மணிக்கோனார் மகன் கலியபெருமாள் ஆவார்கள். வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>5. எழுவினாக்கள்:–</u>

இந்நீதிமன்றம் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை நன்கு பரிசீலனை செய்த பின்னர், கீழ்க்கண்ட எழுவினாக்களை கடந்த 02.12.2023ம் தேதியன்று வனைந்ததுள்ளது.

1. தாவா சொத்துக்கள் பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பச் சொத்துக்களா?
2. வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/6 பங்கு பாத்தியம் உள்ளதா?
3. ஆவண எண்.3999/2014 கொண்ட கிரையப் பத்திரத்தினை செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் பெற வாதி உரிமையுடையவரா?

4. ஆவண எண்.2434/2015 கொண்ட கிரையப் பத்திரத்தினை செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் பெற வாதி உரிமையுடையவரா?

5. வாதி முதல்நிலைத் தீர்ப்பாணையின்படி பாகப்பிரிவினை பரிகாரம் பெற உரிமையுடையவரா?

6. இவ்வழக்கில் வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது?

7. வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற உரிமையுடையவரா?

6. சாட்சிய சான்றாவணங்கள்:

6.1 வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த 10.10.2018ம் தேதியிட்ட ரீ செட்டில்மெண்ட் பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 25.06.2018 தேதியிட்ட UDR அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கருப்ப கோனார், துளசி, பரமசிவம் ஆகியோர்கள் பெயரில் உள்ள 15.11.2017ம் தேதியிட்ட கணினி பட்டா நகல் வா.சா.ஆ.3 ஆகவும், துளசிகோனார் பெயரில் உள்ள 30.11.2017ம் தேதியிட்ட கணினி பட்டா நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 15.11.2017ம் தேதியிட்ட பொன்னுச்சாமி பெயரில் உள்ள கணினி பட்டா நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 16.11.2017 தேதியிட்ட வில்லங்கச் சான்றிதழின் கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 16.11.2017 தேதியிட்ட வில்லங்கச் சான்றிதழின் இணையத்தில் இருந்து பதிவிறக்கப்பட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 5ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 13.07.2015ம்

தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகவும், 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள் 10ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 10.10.2014ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகவும், வாதி 1 முதல் 10 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய 04.12.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.10 ஆகவும், 1, 6 மற்றும் 10 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட ஒப்புகை அட்டைகள் வா.சா.ஆ.11 ஆகவும், 5ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு வெளியூரில் வசிப்பதாக திருப்பப்பட்ட அஞ்சல் வா.சா.ஆ.12 ஆகவும், 2, 3, 4, 7, 8 மற்றும் 9 ஆகிய பிரதிவாதிகளுக்கு மேற்படி வழக்கறிஞர் அனுப்பப்பட்டு அவர்களால் மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட அஞ்சல் வா.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.2 11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பில் நிலமெடுப்பு காவேரி வைகை குண்டாறு இணைப்பு யூனிட் – 2ல் தனி வட்டாட்சியராக பணிபுரிந்து வரும் சுரேஷ் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் எந்த ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

7. இருதரப்பு வாதுரைகள்:–

வாதி தரப்பு வழக்கறிஞரின் விவாதத்தின்போது, வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையான ஆவணங்கள்மூலமும் வா.சா.1ன் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளதால் வாதி கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிட்டார். 11, 12 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் விவாதத்தின்போது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை முன்வைத்தார்.

<u>8. 1, 2 மற்றும் 5வது எழுவினாகளுக்கான தீர்வு:—</u>

8.1 தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனாரான அம்மாசி கோனார் என்பவருக்கும், வாதியின் தாயாரான சுப்பம்மாள் என்பவருக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களுக்கான ரீ செட்டில்மெண்ட் 'அ' பதிவேடு வாதியின் தகப்பனாரான அம்மாசி கோனார் பெயரிலும், தாவா 7வது அயிட்ட சொத்திற்கான UDR 'அ' பதிவேடு வாதியின் பெற்றோர்களான அம்மாசி கோனார் மற்றும் சுப்பம்மாள் பெயரிலும் உள்ளது என்று வாதி வழக்குரையில் கூறியுள்ளார். மேற்படி கூற்றினை நிரூபணம் செய்யும் பொருட்டு, வாதி 10.10.2018ம் தேதியிட்ட புலியூர் கிராம ரீ செட்டில்மெண்ட் பதிவேட்டின் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.1 ஆகவும், 25.06.2018ம் தேதியிட்ட செட்டிப்பட்டி கிராம U.D.R. 'அ' பதிவேட்டின் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்துள்ளார். வா.சா.ஆ.1யை உற்றுநோக்குகையில், அது புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளரினால் வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் என்பதும், அது 25.02.1971ம் தேதியிட்ட ரீ செட்டில்மெண்ட் பதிவேட்டின் உண்மை நகல் என்பதும், 25.02.1971ம் தேதியன்று தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களுக்கு வாதியின் தகப்பனாரென வாதியினால் கூறப்படும் சி.அம்மாசிக் கோனார் என்பவர் பெயரில் பட்டா எண்.609ன் படி பட்டா ஏற்பட்டு இருந்தது என்பதும் தெரியவருகின்றது. மேலும், வா.சா.ஆ.2யை உற்றுநோக்குகையில், அது குளத்தூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியரினால் கடந்த 25.06.2018ம் தேதியன்று வழங்கப்பட்ட செட்டிபட்டி கிராமத்தின் U.D.R 'அ' பதிவேட்டின் சான்றிட்ட நகல் என்பதும்,

தாவா 7வது அயிட்ட சொத்து வாதியின் பெற்றோர்கள் என வாதியினால் கூறப்படும் சி.அம்மாசி மற்றும் பி.சுப்பம்மால் ஆகியோர்கள் பெயரில் பட்டா எண்.1031ன் படி பட்டா ஏற்பட்டு இருந்தது என்பதும் தெரியவருகிறது.

8.2 மேலும், தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கான பட்டா கூட்டாக 5 மற்றும் 6 பிரதிவாதிகளின் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும், தாவா 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களுக்கான பட்டா 5ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும், தாவா 7வது அயிட்ட சொத்திற்கான பட்டா 7ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும் வாதி கூறியுள்ளார். மேற்படி கூற்றிற்கு ஆதரவாக, வாதி வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். வா.சா.ஆ.3 தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் அடங்கிய 15.11.2017ம் தேதியிட்ட பட்டா எண்.1508 கொண்ட கணினி பட்டா நகல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.3யை உற்றுநோக்குகையில், தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கான பட்டா 3ம் பிரதிவாதியாகிய கருப்ப கோனார், 5ம் பிரதிவாதியாகிய துளசி, 6ம் பிரதிவாதியாகிய பரமசிவம் ஆகியோர்களின் பெயர்களில் ஏற்பட்டு இருப்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகின்றது. வா.சா.ஆ.4 தாவா 4 மற்றும் 5வது அயிட்ட சொத்துகளுக்குரிய 29.11.2017ம் தேதியிட்ட பட்டா எண்.720 கொண்ட கணினி பட்டா நகல் ஆகும். வா.சா.ஆ.4 மூலம் தாவா 4 மற்றும் 5வது அயிட்ட சொத்துக்களுக்கான பட்டா துளசி கோனாராகிய 5ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டு இருப்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.5 தாவா 7வது அயிட்ட சொத்துக்குரிய 15.11.2017ம் தேதியிட்ட பட்டா எண்.2263 கொண்ட கணினி பட்டா நகல் ஆகும். மேற்படி ஆவணத்தினை பரிசீலனை செய்கையில், தாவா 7வது அயிட்ட சொத்திற்கான பட்டா

பொன்னுச்சாமி ஆகிய 7ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டு இருப்பது தெரியவருகிறது.

8.3 மேலும், வாதி தாவா சொத்துக்களை பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்றும் அதில் வாதிக்கு 1/6 பங்கு பாத்தியம் உள்ளது என்றும் தாவா சொத்துக்களை வாதியும் 1 முதல் 6 பிரதிவாதிகளும் எவ்வித பாகப்பிரிவினையும் இன்றி கூட்டாக பயன்படுத்தி வருகின்றனர் என்றும் கூறுகிறார். இது குறித்து பார்க்கையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் **Vembu Ammal & 7 others vs. Pattuammal & 3 others 1999(III) CTC 717** என்ற வழக்கில் "ஒரு தனிநபரின் பெயரில் உள்ள சொத்து கூட்டுக் குடும்பச் சொத்து என கூறுபவரிடமே அதனை மெய்ப்பிக்கும் பொறுப்பு உள்ளது" என்று கூறியுள்ளது. மேலும் மாண்பமை உச்சநீதிமன்றம், **Srinivas Krishnarao Kango (Vs) Narayan Devji Kango and Others Reported A.I.R. 1954 S.C. 379** என்ற வழக்கில்,

> "Proving of existence of a joint family does not lead to the presumption that the property held by any member of the family is joint and the burden rests upon anyone asserting that any Item of property was joint to establish the fact."

மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டை கூறியுள்ளது. எனவே, தாவா சொத்துக்கள் இந்து கூட்டுக் குடும்பச் சொத்துக்கள் என்பதனை மெய்ப்பிக்கும் பொறுப்பு வாதியிடமே உள்ளது. வாதி கூறுவது போல, தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களுக்கான ரீ செட்டில்மெண்ட் 'அ' பதிவேடு வாதியின் தகப்பனாரென வாதி குறிப்பிடும் அம்மாசி கோனார் பெயரிலும், தாவா 7வது

அயிட்ட சொத்திற்கான UDR 'அ' பதிவேடு வாதியின் பெற்றோர்களென வாதி குறிப்பிடும் அம்மாசி கோனார் மற்றும் சுப்பம்மாள் பெயரிலும் தான் உள்ளது என்பதனை வாதி வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் மூலம் இந்நீதிமன்றம் முன்பு நிரூபணம் செய்துள்ளார். ஆனால், வாதி, மேற்படி அம்மாசி கோனார் மற்றும் சுப்பம்மாள் ஆகியோரின் வாரிசு என்பதை நிரூபிக்கும் வகையில், எந்தவொரு ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் இல்லை, சாட்சியையும் முன்னிறுத்தவில்லை. அதுபோல், 3 முதல் 6 பிரதிவாதிகள் வாதியின் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் என்பதனை காட்டும் வகையிலும், எந்தவொரு ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் இல்லை, சாட்சியையும் முன்னிறுத்தவில்லை. மேலும், வா.சா.ஆ.1 ஆன 10.10.2018 தேதியிட்ட ரீ செட்டில்மெண்ட் பதிவேட்டின் சான்றிட்ட நகலில் 25.02.1971ம் தேதியன்று தாவா 1 முதல் 6 அயிட்டச் சொத்துக்களுக்கான பாட்டாவானது அம்மாசி கோனார் என்பவர் பெயரில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், 15.11.2017ம் தேதியிட்ட வா.சா.ஆ.3-ன் மூலம் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்குரிய பட்டாவானது 3ம் பிரதிவாதியாகிய கருப்ப கோனார், 5ம் பிரதிவாதியாகிய துளசி, 6ம் பிரதிவாதியாகிய பரமசிவம் ஆகியோர்கள் பெயர்களில் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வாதி எவ்வாறு, எதன் அடிப்படையில் 3, 5 மற்றும் 6 பிரதிவாதிகளின் பெயர்களில் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கான பட்டா ஏற்பட்டது என்பதற்கான எந்த ஒரு காரணத்தையும் இந்நீதிமன்றத்தில் முன்வைக்கவில்லை. மேலும், பட்டா மாறுதல் உத்தரவையும் தாக்கல் செய்யவில்லை. முறையே தாவா 5 மற்றும்

6அயிட்ட சொத்துக்களுக்கான பட்டாவான வா.சா.ஆ.4 29.11.2017ம் தேதியன்று 5ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணத்தையும் வாதி இந்நீதிமன்றத்தில் முன்வைக்கவில்லை. மேலும், பட்டா மாறுதல் உத்தரவையும் தாக்கல் செய்யவில்லை. அதுபோலவே, தாவா 7வது அயிட்ட சொத்துகளுக்குரிய பட்டாவான வா.சா.ஆ.5 15.11.2017ம் தேதியன்று 7ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணத்தையும் வாதி இந்நீதிமன்றத்தில் முன்வைக்கவில்லை. மேலும், பட்டா மாறுதல் உத்தரவையும் தாக்கல் செய்யவில்லை.

8.4 எனவே, வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ.2ன் படி தாவா சொத்தின் ஆதிசுவாதீனதாரர்களான அம்மாசி கோனார் மற்றும் சுப்பம்மாள் ஆகியோர்களின் வாரிசுகளில் ஒருவர் தான் வாதி என்பதனை போதிய சாட்சியங்கள் மூலம் இந்நீதிமன்றத்தின் முன்பு நிரூபணம் செய்யத் தவறியதாலும், ஆதியில் அம்மாசி கோனார் மற்றும் சுப்பம்மாள் பெயரில் இருந்த தாவா சொத்துக்களுக்கான பட்டாவானது எவ்வாறு 3, 5, 6 மற்றும் 7ம் பிரதிவாதிகளின் பெயர்களில் மாறியது என்பதற்கான போதிய விளக்கத்தை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காத காரணத்தினாலும், தாவா சொத்துக்களை வாதியும், 1 முதல் 6 பிரதிவாதிகளும் எவ்வித பாகப்பிரிவினையும் இன்றி இந்து கூட்டுக் குடும்ப சொத்துக்களாக அனுபவித்து வந்தனர் என்பதனை இந்நீதிமன்றத்தில் நிரூபிக்காத காரணத்தினாலும், தாவா சொத்துக்கள் பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்ப சொத்துக்கள் அல்ல என்று இந்நீதிமன்றம் கருதி எழுவினா–1ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணுகிறது. மேலும், எழுவினா–1ல் இந்நீதிமன்றம் வாதிக்கு எதிராக தீர்வு கண்டுள்ள படியால், தாவா

முதலாவாது பரிகாரமாக வாதி கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவுசெய்கிறது. எனவே, எழுவினா–2 மற்றும் 5–ற்கு இந்நீதிமன்றம் வாதிக்கு எதிராக தீர்வு காணுகிறது.

<u>9. 3, 4 மற்றும் 7 எழுவினாக்களுக்கான தீர்வு:–</u>

9.1 வாதி இரண்டு மற்றும் மூன்றாவது பரிகாரங்களாக விளம்புகை பரிகாரங்கள் கோரியும், தாவா நான்காவது பரிகாரமாக நிரந்தர தடையாணை பரிகாரம் வழங்கக் கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். அதாவது, தாவா 7வது அயிட்ட சொத்தைப் பொறுத்து 3ம் பிரதிவாதியின் மகன்களான 7 மற்றும் 8 பிரதிவாதிகள் 10ம் பிரதிவாதிக்கு கடந்த 10.10.2014 தேதியன்று குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில், ஆவண எண்.3999/2014ன் படி ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் வாதியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை பரிகாரம் வழங்குமாறும், தாவா 1 முதல் 3, 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 5ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு கடந்த 13.07.2015ம் தேதியன்று குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில், ஆவண எண்.2434/2015–ன் படி ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் வாதியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை பரிகாரம் வழங்குமாறும், வழக்கு சொத்துகளை பிரதிவாதிகள் வேறு யாருக்கும் கிரையம் முதலிய பாராதீனம் செய்யக் கூடாதென நிரந்தர தடையாணை பரிகாரம் வழங்குமாறும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

9.2 வாதிக்கு கடந்த 10.10.2014ம் தேதியன்று, தாவா 7வது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.44.0 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட

நிலத்தைப் பொறுத்து மட்டும், 3ம் பிரதிவாதியின் மகன்களான 7, 8 பிரதிவாதிகள் குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.3999/2014 கொண்ட ஆவணத்தின்படி 10ம் பிரதிவாதிக்கு ஆதரவாக கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்திருப்பதும், கடந்த 13.07.2015ம் தேதியன்று தாவா முதல் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.00.66 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.00.66 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா மூன்றாவது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 00.10.5 பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா ஐந்து மற்றும் ஆறு அயிட்ட சொத்துக்கள் முழுவதையும் 5ம் பிரதிவாதி குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.2434/2015 கொண்ட கிரைய ஆவணத்தின் படி 9ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்திருப்பதும் வாதிக்கு தெரியவந்தது என்றும் வாதி கூறியுள்ளார்.

9.3 வாதி மேற்படி கூற்றினை நிரூபணம் செய்ய, வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். வா.சா.ஆ.6 ஆவணம் 06.11.2017ம் தேதியன்று தாவா 1 முதல் 3, 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களைக் குறித்து எடுக்கப்பட்ட வில்லங்கச் சான்றிதழ் ஆகும். வா.சா.ஆ.6ல் 5ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திய 13.07.2015ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தினைப் பற்றிய குறிப்பு இடம்பெற்றிருந்தது. வா.சா.ஆ.7 06.11.2017ம் தேதியன்று தாவா 7வது அயிட்ட சொத்துக்களைக் குறித்து எடுக்கப்பட்ட வில்லங்கச் சான்றிதழ் ஆகும். வா.சா.ஆ.7ல் 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள் 10ம்

பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திய 10.10.2014ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தினைப் பற்றிய குறிப்பு இடம்பெற்றிருந்தது. வா.சா.ஆ.8 5ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திய 13.07.2015ம் தேதியிட்ட குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 2015ம் வருட 2434 ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆகும். வா.சா.ஆ.8யை உற்றுநோக்குகையில், கிரைய 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களான தாவா 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்கள் 5ம் பிரதிவாதிக்கு பட்டா எண்.720 கொண்ட பட்டாவின் படி பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், கிரைய 4, 5 மற்றும் 10ம் அயிட்ட சொத்துக்களான தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் 3, 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு பட்டா எண்.1508 கொண்ட பட்டாவின் படி பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அதில் 5ம் பிரதிவாதிக்கு 3ல் 1 பங்கு பாத்தியம் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது. மேற்படி கிரைய ஆவணத்திம் மூலம் 5ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு தாவா முதல் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.00.66 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.00.66 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா மூன்றாவது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 00.01.5 பரப்பளவு கொண்ட நிலத்தையும், தாவா 5 மற்றும் 6வது அயிட்ட சொத்துக்கள் முழுவதையும் விற்பனை செய்துள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. மேலும், வா.சா.ஆ.9, 7 மற்றும் 8ம் பிரதிவாதிகளால் 10ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திய 10.10.2014ம் தேதியிட்ட குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 2014ம் வருட 3999 ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட

நகல் ஆகும். வா.சா.ஆ.9 ஆவணத்தினை உற்றுநோக்குகையில், கிரையப் பத்திரத்தின் மையப் பொருள் தாவா 7வது அயிட்ட சொத்து என்பதும் மேற்படி சொத்து 7 மற்றும் 8ம் பிரதிவாதிகளுக்கு பட்டா எண்.2263 கொண்ட பட்டாவின் படி பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டு இருப்பதும், தாவா 7வது அயிட்ட சொத்தில் தென்புறம் உள்ள 0.44.0 ஏர்ஸ் நிலம் மட்டும் 10ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்டு இருப்பதும் தெரியவருகிறது. மேலும், காவேரி–வைகை–குண்டாறு இணைப்பு கால்வாய் திட்டத்திற்காக தாவா 4 மற்றும் 5 அயிட்ட சொத்துக்கள் முழுமையாக கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தாவா 6வது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீர்ணத்தில் 0.02.30 ஏர்ஸ் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் 11 மற்றும் 12ம் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளனர். மேலும், 11 மற்றும் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரையில் தாவாவின்படி தீர்ப்பாணை வழங்க ஆட்சேபித்து இருந்தாலும், பி.வா.சா.1–ன் முதல் விசாரணை பிரமாணப்பத்திரிகையில் மேற்படி திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள தாவா சொத்துக்களைத் தவிர மீத அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து தாவாவின்படி தீர்ப்பாணை வழங்குவதில் அவர்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

9.4 வாதி இந்து கூட்டுக் குடும்ப சொத்துக்களைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ள மேற்படி கிரைய ஆவணங்கள் செல்லாது என்றும் அவரை கட்டுப்படுத்தாது என்றும் கூறுகின்றார். மேற்படி கிரைய ஆவணங்களை ஆய்வு செய்வதன் மூலம், மேற்படி கிரைய சொத்துக்கள் கிரைய விற்பனையாளர்களுக்கு பட்டாவின் படி பாத்தியப்பட்டவை என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வாதி தாவா சொத்திற்கான பட்டா ஆதிசுவாதீனதாரர்கள் பெயர்களில் இருந்து எவ்வாறு இவர்கள் பெயர்களுக்கு மாறியது என்பதற்கான எந்த ஒரு காரணத்தையும் வாதி குறிப்பிடவில்லை. மேலும், வாதி 3ம் பிரதிவாதியான கருப்பையாவை தனது சகோதர் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், வா.சா.ஆ.9 ஆவணத்தின் விற்பனையாளர்களான 7 மற்றும் 8 பிரதிவாதிகளை 3ம் பிரதிவாதியின் மகன்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், வா.சா.ஆ.9 ஆவணத்தில் 7 மற்றும் 8 பிரதிவாதிகளின் தகப்பனாரின் பெயர் என்ற இடத்தில் லேட்.கருப்பையா மகன்கள் பொன்னுசாமி மற்றும் சுப்பிரமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி ஆவணத்தில் முதலாவது சாட்சியாக அம்மாசி கோனார் மகன் கருப்பையா என்பவர் கையொப்பம் செய்துள்ளார். 7 மற்றும் 8 பிரதிவாதிகளின் தகப்பனார் தாவா 3ம் பிரதிவாதியென்றால் வா.சா.ஆ.9 ஆவணத்தில் லேட்.கருப்பையா மகன்கள் பொன்னுசாமி மற்றும் சுப்பிரமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளதற்கான விளக்கம் எதனையும் வாதி குறிப்பிடவில்லை. மேலும், மேற்படி ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள கருப்பையா என்பவர் தான் 3ம் பிரதிவாதியென்றால், 7 மற்றும் 8 பிரதிவாதிகளின் தகப்பனார் என்று வா.சா.ஆ.9ல் லேட்.கருப்பையா என்று ஏன் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விளக்கத்தினையும் வாதி தெரிவிக்கவில்லை. எனவே, 3ம் பிரதிவாதி தான் 7 மற்றும் 8 பிரதிவாதிகளின் தகப்பனாரா என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகின்றது.

9.5 எனவே, 1,2 மற்றும் 5 எழுவினாக்கள் வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டிருகின்ற காரணத்தினாலும், 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள் 10ம்

பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திய 10.10.2014ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது 7ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவின் அடிப்படியில் ஏற்பட்டுள்ள ஆவணம் என்பதாலும், 5ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திய 13.07.2015ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது 5ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவின் அடிப்படியில் ஏற்பட்டுள்ள ஆவணம் என்பதாலும், 3, 4 மற்றும் 7 ஆகிய எழுவினாக்களுக்கான தீர்வு வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டு, தாவா இரண்டாவது பரிகாரமாக 7, 8 பிரதிவாதிகள் 10 பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்திய 10.10.2014ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தினை செல்லாது என விளம்புகை செய்யக்கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா மூன்றாவது பரிகாரமாக 5ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய 13.07.2015ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தினை செல்லாது என விளம்புகை செய்யக்கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா நான்காவது பரிகாரமாக நிரந்தர தடையாணை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து, இந்நீதிமன்றம் 3, 4 மற்றும் 7 ஆகிய எழுவினாக்களுக்கு பதிலளிக்கின்றது.

<u>6-ம் எழுவினாவிற்கான தீர்வு</u>

1 முதல் 5 மற்றும் 7-ம் எழுவினாக்கள் வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், வாதிக்கு வேறு பாரிகாரங்கள் எதுவும் கிடைக்கதக்கதல்ல என்று முடிவு செய்து இந்நீதிமன்றம் 6-ம் எழுவினாவிற்கு பதில் அளிக்கின்றது.

முடிவாக, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்ட தீர்ப்புரையாகும்.

ஒம்/–க.சர்மிஷ்டா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கீரனூர்.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>

வா.சா.1. சிவசாம்பாள்

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

வ.எண்	**தேதி**	**ஆவணங்கள்**	**ஆவணங்களின் தன்மை**
வா.சா.ஆ.1	10.10.2018	மாவட்டட ஆட்சியர் கொடுத்த புலியூர் கிராமத்தின் ரீ செட்டில்மெண்ட் பதிவேடு	சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.2.	25.06.2018	U.D.R.'அ' பதிவேடு	சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.3	15.11.2017	கருப்பக்கோனார், துளசி மற்றும் பரமசிவம் பெயரில் உள்ள பட்டா	கணினி நகல்
வா.சா.ஆ.4	30.11.2017	துளசி கோனார் பெயரில் உள்ள பட்டா	கணினி நகல்
வா.சா.ஆ.5	15.11.2017	பொன்னுச்சாமி பெயரில் உள்ள பட்டா	கணினி நகல்
வா.சா.ஆ.6	16.11.2017	வில்லங்கச்சான்றிதழ்	கணினி நகல்
வா.சா.ஆ.7	16.11.2017	வில்லங்கச்சான்றிதழ்	கணினி நகல்

வா.சா.ஆ.8	13.07.2015	5-ம் பிரதிவாதி 9-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம்	அசல்
வா.சா.ஆ.9	10.10.2014	10-ம் பிரதிவாதிக்கு 7, 8-ம் பிரதிவாதிகள் எழுதி கொடுத்த கிரைய பத்திரம்	அசல்
வா.சா.ஆ.10	04.12..2017	வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு	சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.11	-	வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பை 1, 6, 10 ம் பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட ஒப்புகை அட்டை	அசல்
வா.சா.ஆ.12	-	வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பை 5ம் பிரதிவாதி பெற்றுகொள்ளவில்லை என்று திருப்பிவிடப்பட்ட அஞ்சல்	அசல்
வா.சா.ஆ.13	-	வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பை 2,3,4,7,9-ம் பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளவில்லை என்று திருப்பிவிடப்பட்ட அஞ்சல்	அசல்

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :

பி.சா.1. சுரேஷ்

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை

ஒம்/-க.சர்மிஷ்டா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

கீரனூர்

// உண்மை நகல்//

K SARMISHTA

Digitally signed by K SARMISHTA
Date: 2025.10.08 18:42:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

கீரனூர்